குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்

# விவசாயியும்
# மற்றும்
# விதையும்



எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: M. Maillot; Lazarus

தழுவியவர்: E. Frischbutter; Sarah S.

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2014 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

ஒருநாள் இயேசு ஏரியின் அருகிலே போதித்துக் கொண்டிருந்தார். அவரை கேட்பதற்கு அநேக ஜனங்கள் கூடி



வந்தார்கள். ஜனக்கூட்டம் மிகவும் பெரியதாயிற்று.

இயேசு என்ன செய்வார்?

அருகாமையிலே ஒரு படகைப் பார்த்து, இயேசு அதின்மேல் ஏறினார். இப்போது அவரால் ஜனங்களை பார்க்க முடிந்தது மற்றும் ஜனங்களால் பார்க்கவும் கேட்கவும் முடிந்தது.



இயேசு உவமைகளைச் சொல்ல ஆரம்பித்தார் - உவமை என்றால் தேவனை குறித்து கற்பிக்கக் கூடிய சாதாரண காரியங்களின் கதைகள்.



"ஒரு விவசாயி தன்னுடைய வயலிலே விதைகளை விதைத்தான்." இயேசுவின் கதைகள் வரையப்பட்ட சித்திரமாய் இராமல் வார்த்தையினால் அடங்கிய படங்களாய் இருந்தன.



ஜனங்களால் ஒரு விவசாயி வேலைசெய்வதை கற்பனை பண்ணமுடியும் - ஏனெனில் அவர்கள் அநேக முறை பார்த்திருக்கிறார்கள்.




விதைக்கப்பட்ட சில விதைகள்
வழியருகே கிடந்தன. கலகலப்பு!
பறவைகள் உடனே
கீழே வந்து மடமடவென
விழுங்கிப்போட்டது.



சில விதைகள் வயலின் கற்பாறையின்
மேல் விழுந்தது. அவர்கள் சீக்கிரமாக
மெலிந்த நலிந்த செடிகளாக வளர்ந்தன.
சூரியனின் வெப்பத்தில் அவைகள்
சுருங்கிப் போயின
ஏனெனில் மண்ணில்
ஆழமில்லாததால்
அவைகளால் வேர்
கொள்ள முடியவில்லை.

மற்ற விதைகளோ முட்களுக்குள்ளே வேரூன்றின. அவைகளாலே பலன் எதுவும் கொடுக்க முடியவில்லை. அந்தச் சிறிய செடிகளை முட்கள் மறைத்துக்கொண்டு, தேவையான சூரிய வெளிச்சத்தையும், மழையையும் தடுத்து நிறுத்தின.



மீதமான விதைகளோ நல்ல நிலத்தில் விழுந்தன. நாட்கள் செல்லச் செல்ல, தளிர்கள் நல்ல செடிகளாக மாறி, புதிய தானியங்களை அதிகமாக விளைவித்தது. விவசாயிகள் அதிக சந்தோஷமடைந்திருக்கலாம்.



கதையைச் சொல்லி முடித்த பின், சீஷர்கள் இயேசுவினிடத்தில் வந்தார்கள். "உவமைகளினாலே ஏன் போதிக்கிறீர்?" என்று கேட்டார்கள்.



ஜனங்கள் உண்மையிலே தேவனை நேசித்தால் உவமைகள் தேவனைப் பற்றி அறிந்து கொள்ள உதவிச் செய்யும் என்று இயேசு சொன்னார்.



தேவனை நேசிக்காத ஜனங்களால் உவமைகளை புரிந்து கொள்ள முடியாது.




இயேசு உவமையை
விளக்கினார். விதை என்பது
தேவனுடைய வார்த்தை என்றார் அவர்.


வழியருகே உள்ள விதையென்றால்
தேவனுடைய வசனத்தைக் கேட்டு அதைப்
புரிந்து கொள்ளாதவர்கள். தேவன் சொன்னதை
சாத்தான்
மறக்கச்
செய்கிறான்.

சில ஜனங்கள் தேவனுடைய
வசனத்தை அவசரமாக
கேட்கிறார்கள். அவர்கள்
கற்பாறையில் விழுந்த
விதைக்குச் சமானம்.



ஆனால் சிலர் அவர்களை கிண்டல் பண்ணினாலோ,
தேவனை அன்பு கூறுவதினாலே கஷ்டங்கள்
வந்தாலோ, தங்களுடைய நண்பர்களை பிரியப்படுத்த
அவர்கள் நினைப்பது
மிகவும் வருந்தத்தக்க காரியம்.



சந்தோஷத்துடன் இயேசுவை பின்பற்ற தொடங்கிய அதே ஜனங்கள், தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய மறுத்துவிடுகிறார்கள்.



தேவனைப் பின்பற்ற வேண்டியதின் கிரயத்தை அவர்கள் கொடுக்க விரும்புவதில்லை. தேவனைப் பிரியப்படுத்தாமல் தங்களுடைய நண்பர்களை பிரியப்படுத்த அவர்கள் நினைப்பது வருந்ததக்க காரியம்.



உவமையிலே வரும் முள் என்பது சில ஜனங்களின் வாழ்க்கையானது உலகப்பிரகாரமான கவலைகளாலும் பணத்தின் மேல் உள்ள ஆசையினாலும் நிரப்பப்பட்டிருப்பதைக் குறிக்கிறது.



அவர்கள் எப்போதும்
பணத்தை மேலும்
விருத்தி செய்கிற
வேலையிலும் மற்ற
காரியங்களிலும்
ஈடுபாடு கொள்வதால்
தங்களுடைய
வாழ்க்கையிலே
தேவனை
விட்டுவிடுகிறார்கள்.



தேவனுடைய வசனத்தை உள்ளத்திலே ஏற்றுக்கொண்டு தங்களுடைய வாழ்க்கையில் மாற்றம் பெறுகிறவர்கள் நல்ல நிலத்தில் விழுந்து நல்ல விளைச்சலைக் கொடுக்கிற விதைக்கு சமானம். அந்த ஜனங்கள் தேவனுக்கு சேவை செய்து அவரைக் கனம் பண்ணுகிறார்கள்.



ஜனக்கூட்டம் அங்கிருந்து செல்ல விரும்பவில்லை. அநேகர் தேவனை பின்பற்றி அவரை மகிழ்விக்க விரும்பினார்கள். இயேசுவின் உவமைகள் தேவனுக்கு எப்படி கீழ்ப்படிய வேண்டுமென்று புரிந்து கொள்ள உதவி செய்தது.



விவசாயியும் மற்றும் விதையும்

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

மத்தேயு 13

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது
வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16